வெளியீட்டு எண் : 2
செப்டம்பர் 15ந் தேதி 2005ஆம் ஆண்டு

ADER
UNE ONG POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL

FONDATION DE FRANCE

# அரசு சாரா நிறுவன தகவல் இதழ்

பி.பொ.வ.கூ. அரசுசாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகம்
6 Chanda Sahib street, Pondicherry, 605 001 India
Telephone: +91 413 520 0606 Fax : +91 413 520 0607
Email: infoinde@ader-france.org

தென்னிந்தியாவில் அதிகமான அரசு சாரா நிறுவனங்கள் இருப்பதால் அவைகளுக்கு உதவி செ–யும் பொருட்டு ADER- (ASSOCIATION POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL) அதாவது, பி.பொ.வ.கூ. (பிராந்திய பொருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) என்பது ஒரு பிரஞ்சு அரசு சாரா நிறுவனம் மற்றும் FDF- (LA FONDATION DE FRANCE) அதாவது, பி.த.ஸ். (பிரஞ்சு தர்ம ஸ்தாபனம்) ஒரு பிரஞ்சு அரசு சாரா நிறுவனம் ஆகியவை இணைந்து துவக்கிய அரசு சாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகத்தை பி.பொ.வ.கூ. புதுவையில் நடத்தி வருகிறது. இந்த அலுவலகம் சுனாமி சம்மந்தமான அனைத்து தகவல்களையும் பெற்று, தயார் செ–து தகவல் மடலாக மாதம் இரு முறை வெளியிடுகிறது.

## உள்ளடக்கம்

- **தகவல் அலுவலகத்தின் தற்போதைய நிலவரம்**
- **இரு வார செ–திகளின் தொகுப்பு**
  - பொது
  - சுற்றுப்புறச்சூழல்
  - மறுகட்டுமானம்
  - சமூக நிகழ்வுகள்
- **நிகழ்வுகளின் பட்டியல்**
- **இணைப்பு : அரசு சாரா நிறுவனங்கள் சம்பந்தமான இணையதள பட்டியல்**

## தகவல் அலுவலகத்தின் தற்போதைய நிலவரம்

பி.பொ.வ.கூ. (பிராந்திய பெருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) யின் அரசுசாரா நிறுவன தகவல்அலுவலகம் திறந்து 1 மாதத்திற்குப் பிறகு தன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. அதன்படி சிறிய தங்கும் விடுதியை நடத்தி, புனரமைப்பு மற்றும் சுனாமி சம்மந்தமாக புதுவைக்கு வரும் விருந்தினர்களை வரவேற்கிறோம். விருந்தினர் குறைந்தபட்சம் 1 நாளைக்கு முன்பாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்கள் தங்கும் நாட்கள் மற்றும் வருவதற்கான காரணத்தை தெரியப்படுத்தவேண்டும்

**பி.பொ.வ.கூ. பின் தங்கும் விடுத்தி**
எண் 4, இராமராஜா சாலை, புதுவை – 605 5001.
கை தொலைபேசி : 91 (0) 98946 80458

## இரு வார செ திகளின் தொகுப்பு

### பொது

*பேரழிவு மேலாண்மையின் கருப்பொருள் மாறியது.*

பேரழிவு மேலாண்மை இந்திய வளர்ச்சி கொள்கையை திட்டமிடுதல் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஏழை, பிற்படுத்தப்பட்வர்கள் மற்றும் மகளிர் மிக மோசமாக பேரிடர் மற்றும் பேரழிவால் பாதிக்கப்படுகின்றனர்.
மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் மாண்புமிகு. திரு. A. ராஜா கூறுகையில் ஒவ்வொரு மாநிலமும் திட்டம் ஒன்றை தயாரிக்கவேண்டும் அதில் பேரழிவுக்கு தயாராகவும், விரைவாகவும் மற்றும் புனரமைப்பு நிவாரணங்கள் போன்ற அம்சங்கள் உள்ளடக்கி இருக்க வேண்டும். “புதிய அணுகு முறைப்படி பேரழிவு நிவாரணம், வளர்ச்சிப்பாதையில் உருவாக்கப்படவில்லை என்றால் நிலையான வளர்ச்சி இருக்காது என்றார்”. மேலும் அவர் கூறுகையில் திட்ட அணுகுமுறையில் பல அம்சங்கள் கொண்டிருக்கவேண்டியது அவசியம் என்றார்.

அரசு முயற்சிக்கு துணையாக, அகில உலக வளர்ச்சி அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் துணையுடன் 169 இயற்கை பேரழிவு பாதிப்பு பகுதியாக கண்டறியப்பட்டுள்ள புதுவை, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசத்தை உள்ளடக்கி 17 மாநிலங்களில் அபாய போரழிவு மேலாண் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/08/31/stories/2005083103490600.htm

*காவல்துறையினர் கடலோர மாவட்டங்களில் பேரிடர் மேலாண்மை குழுவை அமைக்க இருக்கிறார்கள்.*

தமிழ்நாடு காவல் துறை பேரிடர் மேலாண்மை குழுவை கடலோர மாவட்டங்களில் உருவாக்கி அவசர நிலையை கையாள முடிவு செ–யப்பட்டுள்ளது. இதில் இயற்கை பேரழிவும் அடக்கம் ஆகும், சுனாமிக்கு பிந்தைய மீட்புப் பணியில் தேர்ச்சிபெற்றவர்களை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டு மற்றும் மாதிரியைப் பற்றி தற்சமயம் விவாதிக்கப் பட்டு, தேவைப்படும் அடிப்படை வசதிகளை பற்றி தீர்மானித்துக்கொண்டுள்ளது.

ஆதாரம் : http://www.hindu.com/2005/09/13/stories/2005091304180600.htm

*சுற்றுலா பயணிகளின் வருகை இந்தியாவில் சுனாமிக்குப் பிறகு அதிகரித்துள்ளது.*

PATA- பசுபிக் ஆசிய பயண கூட்டமைப்பு மற்றும் அகில உலக விசா – (கடனட்டை ஸ்தாபனம்) இணைந்து தங்களது அறிக்கையில் கூறுவது என்னவென்றால், சுனாமியால் பாதித்தப்பகுதியில் வெளிநாட்டுப் பயணிகள் வருகை கணிசமாக குறைந்துள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியா மட்டும் பயனடைந்துள்ளது (+16.7% ). இருப்பினும் கடலோர தமிழ்நாடு மற்றும் புதுவையின் விவரம் அளிக்கப்படவில்லை இதன் முழு அறிக்கை பின்வரும் இனையதளத்தில் காணலாம்.
www.pata.org/patasite/fileadmin/news_pata/VISA_PATA_post-tsunami_update.pdf

# விவசாயம்

## தமிழ்நாடு

*விவசாயம் பற்றிய தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நாகப்பட்டினத்தில் நடந்தது, அதன் சுருக்கம்.*

மாவட்ட அளவிலான விவசாயிகள் கூட்டம் நாகப்பட்டின மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆகஸ்டு மாதம் 31–ம் தேதி நடைபெற்றது. அதில் ஏராளமான அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் விவசாயம் சம்மந்தப்பட்ட துறையினர் கலந்துகொண்டனர். தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் வள மையத்தின் விவசாய குபவைச் சார்ந்தவர்ள் கிராமங்களில் நிலத்தை சீர்படுத்துவதாக ஒப்புக்கொண்டு இதுவரை வேலையைத் துவங்காத அரசு சாரா நிறுவனங்களிடம் வேலையட்டவணையைக் கேட்டுள்ளனர். மிக விரைவில் பருவ மழை துவங்க இருப்பதால் விரைவாக நிலத்தை சீர்படுத்வேண்டும் என்று அரசு சாரா நிறுவனங்களிடம் விவசாயக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.
ஆதாரம் : http://trinet.in மற்றும் : www.ncrc.in

# சுற்றுப்புறச்சூழல்

## தமிழ்நாடு

இந்தியாவில் தேர்ந்தெடுக்ப்பட்ட கரலோர பகுதிகளில் சுனாமி பாதிப்பு என்ற ஆரம்பகட்ட மதிப்பீட்டரிக்கை கடல்வளர்ச்சி துறையின் இணையதளத்தில் பெறலாம். www.dod.nic.in. கடல் வளர்ச்சிதுறையின் அறிக்கைபடி பவழப்பாறைகள் கடல் நீர்வாழ் இனத்திற்க்கு சுனாமியால் குறைவான பாதிப்பே, என்று மக்கள் அச்சத்திற்க்கு எதிரான கருத்தை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மிக மோசமாக பாதிக்கப்பட்ட இடங்கள் தாழ்வான பகுதி மற்றும் இயற்கை பாதுகாப்புஅரண் இல்லாத பகுதி. மேலும் கடலோர ஒழுங்கு முறை பகுதியின் (Costal Regulation Zone) அறிக்கையின் வழிக்காட்டலை மறுவரையரை செ–யவேண்டும். ஏனெனில் வரையறுக்கப்பட்ட வாழிட எல்லை (Setback Line) சுனாமி, புயல் போன்றவை ஏற்படும் போது கடலலைகள் வழக்கத்திற்கு அதிகமாகவே ஏற்பட்டு மக்கள் வாழும் இடத்தில் பாதிப்பு ஏற்படுகிறது.
ஆதாரம் : http://www.thehindu.com/2005/09/11/stories/2005091106570400.htm

# மறுகட்டுமானம்

## அந்தமான் மற்றும் நிக்கோபார்

*சுனாமியால் பாதிக்கப்பட்ட அந்தமானில் புனரமைப்பு பணிகள் சரிவர நடக்கவில்லை.*

ஓர் அரசு சாரா நிறுவனமான (HRLN) – மனித உரிமை சட்ட இணை வலையின் ஆ–வின்படி தகர உலோகத்தால் கட்டப்பட்ட வீட்டில் வாழும் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மக்கள் இந்த தகரத்தால் கட்டப்பட்ட வீடுகளினால் கோடைகாலத்தில் வெப்பத்தாலும் மற்றும் மழை காலத்தில் வெள்ளத்தாலும் பாதிக்கப்படுவார்கள் என்று கொலின் கான்சால்வேஸ் HRLN யின் செயல்இயக்குனர் கூறுகிறார்.
ஆதாரம் : http://www.infochangeindia.org/DisastersItop.jsp?section_idv=12

*அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் 6மாதத்திற்க்குப் பிறகு கம்பெட் லா (Combat Law) : ஓர் மனித உரிமை இதழ்.*

சுனாமியால் பாதிக்கப்பட்டோர்களைப் பற்றியும் அவர்களின் நிலைமை, சூழ்நிலை குறித்தும் தமிழ்நாடு மற்றும் புதுவையை பற்றியும் எழுதி வருகிறோம். ஆனால் அந்தமான் மற்றும் நிக்கோபார் பற்றி குறைவான தகவல்களே கிடைக்க பெறுகிறது. மனித உரிமை சட்ட இணை வலை (HRLN) குழுவினர் சுனாமி ஏற்பட்ட உடனேயே தீவுகளுக்குச் சென்று இன்று வரை உடன் இருந்து வருகின்றனர். அவர்களின் வெளிப்படையான நடவடிக்கைகளால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றிய அறிக்கை கம்பெட் லா (Combat Law) என்னும் இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் முழு விவரம் பின் வரும் இணையதளத்தில் உள்ளது.
http://www.indiatogether.org/combatlaw/vol4/issue3/tsunami.htm

## புதுவை

*புதுவை மற்றும் காரைக்காலில் நிரந்தர வீடுகளின் மறுகட்டுமானம்.*

இதுவரை அரசு வெவ்வேறு அரசு சாரா நிறுவனங்களுடன் 8 ஒப்பந்தங்கள் செ–துள்ளது. இதன் படி 2530 வீடுகள் சுனாமி பாதித்த மக்களுக்கு 11 மீனவ கிராமங்களில் கட்டப்பட உள்ளது என்று புதுவை நிவராண ஆணையர் திரு. B.V. செல்வராஜ் கூறினார்.
ஆதாரம் :*New Indian Express* Print version, 11-09-05

## தமிழ்நாடு

*நாகப்பட்டினத்தில் வீடுகட்டும் திட்டத்தின் தற்போதைய நிலை.*

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாகப்பட்டினத்தில் 15 இடங்களில் சுமார் 2500 குடியிருப்புகளில் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று மாவட்ட ஆட்சியர் J. இராதாகிருணன் கூறியுள்ளார். இந்த வீடுகள் 2 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்றும் 2000 வீடுகள் கட்டும் பணி மிக விரைவில் துவக்கப்படும் என்றும் கூறுகிறார்.

சமுதாய நிலை மற்றும் மக்களின் விருப்பத்திற்கேற்றபடி வீட்டின் அமைப்பு இடத்திற்க்கு இடம் வேறுபடும். ஒவ்வொரு வீடும் 324 சதுர அடி அளவில் இருக்கும். அதன் மதிப்பு ரூ 1.50 லட்சமாக இருக்கும் என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில் இந்த வீடுகளை கட்ட 303 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இதுவரை 177.50 ஹக்டர் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 84 ஹெக்டர் அரசுக்கு சொந்தமான நிலமாகும். இந்த நிலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதே இடத்தில் வீடு கட்டித்தரப்படும்.
ஆதாரம் : http://www.thehindu.com/2005/09/10/stories/2005091003700300.htm

*"சுனாமி மறு கட்டுமானத்தில் தக்க கட்டுமான பொருள்கள் மற்றும் தொழில் நுட்பம்" என்ற தலைப்பில் நடந்த கூட்டத்தின் சுருக்கம்.*

இந்த தொழில் கூடத்தை தமிழ்நாடு அரசு, உலகவங்கியின் அவசர மறுகட்டுமான திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் அவசர சுனாமி உதவி திட்டம், ஐக்கிய நாட்டு வளர்ச்சி திட்டம், தமிழ்நாடு சுனாமி நல மையம் மற்றும் ஐக்கிய நாட்டு மீட்புக் குழு இணைந்து 6–09–2005 ஆம் ஆண்டு ஏற்பாடு செ–தனர்.

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சில அமைப்புகள் தங்கள் வீடு கட்டுமான வேலையில் பின்பற்றிவரும் வழிகாட்டல்களை வெளியிட்டனர். "தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட இடைவெளியை பூர்த்தி செ–வது" முக்கியமானதாக இருந்தது மேலும் பணத்தை சேமிப்பதற்காக உள்ளூரில் கிடைக்கும் கட்டுமான பொருட்களைப் பயன்படுத்தி அப்பகுதி மக்களை பங்கு பெறச் செ–வது முக்கியமானதாகும்.

ஆரோவில் பூமி பள்ளி, இந்திய பிளேவுட் தொழிற்சாலைககள் ஆரா–ச்சி மற்றும் பயிற்சிப் பள்ளி மற்றும் தேசிய மூங்கில் குழுவின் நிபுணர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்து கட்டுமானத்தில் புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்துவதைப் பற்றி விளக்கினர்.

இதைத்தவிர அரசாங்க அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள், சுயஉதவிகுழுவின் உறுப்பினர்கள் மற்றும் நன்கொடை அமைப்புகளை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.
ஆதாரம் : http://www.thehindu.com/2005/09/07/stories/2005090706130500.htm

**குறிப்பு :** இன்னும் இணையதளத்தில் இடம்பெற வில்லை.

*கடலூார் மாவட்டத்தில் முதல் நிரந்தர வீடுகட்டும் திட்டம்.*

கடலூர் மாவட்டத்தில், மாதா அமிர்நந்த மாயி மாத் ஆசிரம் சார்பில் நிரந்தர குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. இது அனைத்து உள்ளூர் ஊடகங்களிலும் பிரசுரிக்கப்பட்டு வெளியானது. இந்த நிரந்தர குடியிருப்பு திட்டம் அனைத்து அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர் மற்றும் மின்சார வசதி பெற்று சுனாமி பாதித்த தமிழ்நாடு கடலோர மீனவ கிராமங்களில் முதன் முதலாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகள் 325 சதுர அடி மற்றும் ஒரே மாதிரியான வடிவம் கொண்டு : தலா ஒரு கூடம், ஒரு படுக்கை ஒரு அறை, சமையல் அறை, மாடிக்கு செல்வதற்கு வழியும் மற்றும் குளியல் அறையையும் கொண்டுள்ளன. இந்த வீடுகள் நிலம் கையகப்படுத்திய 3 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
ஆதாரம் : http://www.amritapuri.org/tsunami/sunami49.php
http://www.telegraphindia.com/1050905/asp/nation/story_5198243.asp#
http://www.hindu.com/2005/09/05/stories/2005090506560300.htm
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20050901014847&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&aDate=9%2F1%2F2005

*தற்காலிக குடியிருப்பு தீயில் எரிந்து சாம்பல்.*

செப்டம்பர் 8ம் தேதி புதுவைக்கு அருகில் விழுப்பும் மாவட்டத்தில் உள்ள முதலியார்குப்பம் என்ற இடத்தில் கட்டப்பட்டிருந்த 84 மீனவ தற்காலிக குடியிருப்பு எரிந்து சாம்பல் ஆனது. மின் கசிவு காரணமாக இருக்கலாம் என்று போலீசார் சந்தேகப்படுகின்றனர். உயிர்ச் சேதம் எதுவும் இல்லை என்றாலும் தற்காலிக குடியிருப்பு தகர உலோகத்தால் தடுப்பு அமைத்து மேலே கூரையால் வேயப்பட்டது. குடியிருப்புகள் தகர உலோகத்தால் கூரை அமைக்கப்பட்டிருந்த போதும், வெப்பம் காரணமாக தகர உலோகத்திற்குப் பதிலாக மேலே கூரை வேயப்பட்டிருந்தது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/09/09/stories/2005090904440300.htm

# சமூக நிகழ்வுகள்

*தலித்துகள் சுனாமி மீட்பு மற்றும் புனரமைப்பில் வேறுபடுத்தப்பட்டார்கள் : குறைகேட்கும் முகாமின் சுருக்கம்.*

சுனாமி நிவாரணம் மற்றும் புனரமைப்பு தலித்துகள் வேறுபடுத்தப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு இடையில் ஒருங்கிணைந்த தலித்து அமைப்பு நீதி மன்றத்தை அணுக முடிவு செ–துள்ளனர். ஆகஸ்டு மாதம் 30ம் தேதி சென்னையில் தலித்துகள் பொது குறை தீர்ப்பு முகாம் நடைபெற்றது. அதில் 22 தலித்துகள், 13 சுனாமி பாதித்த மாவட்டங்களில் இருந்து வந்து கலந்து கொண்டு அரசு சாரா நிறுவனங்களின் பெரும்பாலான நிவாரணப் பணியில் தலித்துகள் புறக்கணிக்கப்பட்டார்கள் என குறை கூறினர். தலித்துகள் கடந்த 8 மாதங்களாக சந்தித்த வேறுபடுத்தலை உணர்ச்சிவசபட்டு கூறினர். அதை 7 பேர் கொண்ட குழுவினர் வருத்தத்துடன் கேட்டனர். தலித்துகள் சுதந்திர மனித உரிமை கழகத்தின் ஒரு கணக்கெடுப்பு பட்டியலின்படி 28 கிராமங்கள் நாகப்பட்டினம் மற்றும் காரைக்காலில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. பல முறை விண்ணப்பம் செ–தும் இது வரை எத்தனை தலித் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்ற தகவலை தெரிக்கவில்லை என்று குறைகேட்பு முகாமை ஏற்பாடு செ–த குழுவினர் கூறினர்.
ஆதாரம் : http://www.thehindu.com/2005/08/31/stories/2005083112841000.htm

*சுனாமிக்குப் பின் மனித உரிமை அறிக்கை வெளியீடு.*

சுனாமிக்கு பின் நிவாரணம் மற்றும் புனரமைப்பு : ஒரு மனித உரிமை மீறல் என்ற தலைப்பில் வீடு மற்றும் நில உரிமை இணை வலையில் வெளியிட்ட அறிக்கையின் படி, அதிக அளவில் உதவிகள் வந்து குவிந்த போதும் பெரும்பாலும் உரியவர்களிடம் சென்று சேரவில்லை. மேலும் நிவரணம் முழுமையான மதிப்பீட்டின் அடிப்படையில் நடைபெறவில்லை.

மேலும் இந்த அறிக்கையில் " நிவாரணம் மற்றும் புனரமைப்பு கொள்கை இன பேதமின்றி இருந்தது. பாதிக்கப்பட்ட மக்களின் சிறப்பு தேவைகள் நிராகரிக்கப்பட்டன. அவர்களில் பெண்கள், குழந்தைகள், குடியேறியவர்கள், அகதிகள், இடம் மாறியவர்கள், சிறுபான்மையினர் மற்றும் இயலாதவர்கள் ஆகியோர் அடங்குவர்.

அவர்கள் வாழ்வாதாரம் இன்னும் மாற்றியமைக்கப்படவில்லை. உதாரணமாக பசி, சுகாதார பிரச்சனை, பாதுகாப்பின்மை மற்றும் மன அழுத்தம் ஆகியவையே பாதிக்கப்பட்டவர்களுக்குள் மேலோங்கியுள்ளன.
ஆதாரம் : http://www.hic-sarp.org/news_show_user.php?id=39



Ader

FONDATION DE FRANCE

## நிகழ்வுகளின் பட்டியல்

| நிகழ்வுகள் | அமைப்பாளர் | தேதி/ காலம் | இடம் |
|---|---|---|---|
| Seminar on Tsunami Rehabilitation | **National Institute of Technology and UNESCO**<br>arunparwate@yahoo.co.in | 23-09-05 to 25-09-05 | National Institute of Technology, Kurukshetra |
| Workshop : *Setting Up a Low Cost Information Centre* | **Centre for Education & Documentation**<br>Phone: (080) 25353397<br>cedban@doccentre.org | 25-09-05 to 27-09-05 | CED Bangalore #7, 8th Main , 3rd phase Domlur 2nd Stage Bangalore - 560071 |
| Madurai Symposium: *Advancing Development* | **DHAN Foundation**<br>18, Pillaiyar Koil Street, S.S.Colony, Madurai 625 010<br>dhan@md3.vsnl.net.in | 26-09-05 to 29-09-05 | Madurai; Exact location to be confirmed |
| Training session: *Environmental Health in Emergencies* | **RedR India**<br>info@redrindia.org | 17-10-05 to 23-10-05 | Pune, Maharashtra |
| Workshop: *Understanding the Sphere Project* | **RedR India**<br>info@redrindia.org | 16-11-05 to 19-11-05 | Trivandrum, Kerala. |

## தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

### புதுவை

| | |
|---|---|
| Laurent Tyers<br>Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 80458<br>Email : infoinde@ader-france.org | M. Muruganadam<br>Assistant Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 22240<br>Email : infoinde@ader-france.org |

### பிரான்சு

| | |
|---|---|
| **ADER** : Association pour le Développement Economique Régional<br>Gionata Simioni,<br>Programme Manager<br>31 Rue de Reuilly, 75012 Paris - France<br>Tel. +33 1 40 24 03 03<br>Fax: +33 1 40 24 09 77<br>Email: contact@ader-france.org | **FdF :** Fondation de France<br>Martin Spitz,<br>Programme Manager :<br>Email: martin.spitz@fdf.org<br>Estelle Hédouin,<br>Programme Information Manager:<br>Email: estelle.hedouin@fdf.org |

# இணைப்பு : அரசு சாரா நிறுவனங்கள் சம்பந்தமான இணையதள பட்டியல்

| நிறுவனங்கள் | இணையதள முகவரிகள் |
|---|---|
| | |
| **அரசு மற்றும் மேலாண்மை இணையதல முகவரிகள்** | |
| | |
| Government of India National Disaster Management website | www.ndmindia.nic.in |
| Government of Tamil Nadu Tsunami website | www.tn.gov.in/tsunami |
| Government of Pondicherry Tsunami website (follow links to tsunami website) | www.pondicherry.nic.in |
| France in India | www.france-in-india.org |
| UNDP Tsunami Disaster Information and Documents | http://www.undp.org.in/dmweb/Tsunami/default.htm |
| National Institute for Disaster Management | www.nidm.net |
| Links to Tamil Nadu District web sites | http://www.tn.gov.in/misc/collectors.htm |
| | |
| **தகவல் மற்றும் ஒருங்கிணைப்பு இணையதள முகவரி** | |
| | |
| Asian Disaster Reduction & Response Network (ADRRN) | www.adrrn.net |
| Kanyakumari Rehabilitation Resource Centre | www.krrc.in |
| Nagapattinam Coordination and Resource Centre | www.ncrc.in |
| Tamil Nadu Tsunami Resource Centre (UNDP) | www.tntrc.org |
| Tsunami Information site (run by the South Indian Federation of Fishermen societies - SIFFS) | www.tsunami2004-india.org |
| Tsunami Rehabilitation Information Network (TRINet) | http://trinet.in/ |
| Tsunami Relief and Rehab Coordination (Cuddalore) | www.trrcindia.org |
| | |
| **பிரஞ்சு தர்ம ஸ்தாபன ஆதரவு பெற்ற தொண்டு நிறுவனங்கள்** | |
| | |
| ACTED | www.acted.org |
| ADER | www.ader-france.org |
| Architecture et Développement | www.archidev.org |
| CCFD | www.ccfd.asso.fr |
| DEMAINS | www.demains.org |
| Ecole de l'Art Rue | www.ecoledelartrue.liocand.com/ |
| Emmaüs International | www.emmaus-international.org |
| Enfants de Tous Pays | www.enfantsdetouspays.com |
| Fédération Peuples Solidaires | www.peuples-solidaires.org |
| SithaDairy | www.sithadairy.eu.org |
| Solidarité | www.solidarite.asso.fr |
| Volontariat Inde | www.perso.wanadoo.fr/volontariat.inde/FRANCAIS/introfr.htm |
| | |
| **Fondation de France** | **www.fdf.org** |

| தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய நிறுவனங்கள் | |
|---|---|
| | |
| Auroville Tsunami Relief website | http://www.auroville.org/tsunami/tsunami.htm |
| BLESS | www.bless.org.in |
| Development Technocrats' Forum | www.geocities.com/dtfindia |
| Dhan Foundation | www.dhan.org |
| Institute For Research and Development | www.praxisvision.org |
| M.S. Swamy Nathan Foundation | www.mssrf.org |
| National Campaign on Dalit Human Rights (NCDHR) | www.dalits.org |
| South Indian Federation of Fisherman Societies (SIFFS) | www.siffs.org |